## விண்புறாவை விரட்டுவதா?

வாசிக்க: மாற்கு 3:21-30

***"கிருபையின் ஆவியைப் பழிக்கிறவன் எவ்வளவு கொடிய தண்டனையைப் பெறவேண்டியவன் என எண்ணிப்பாருங்கள்" (எபி 10:29)***

"மனிதர் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் பழிக்கும் பழிப்புரைகளும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்; ஆனால் தூய ஆவிக்கு எதிராகப் பழிப்புரை கூறினால் அவன் மன்னிக்கப்படாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாகியிருப்பான்" (மாற் 3:28,29; மத் 12:31,32; லூக் 12:10). இவ்வார்த்தைகளைப் பெந்தெகொஸ்தேயினர் சில பெந்தெகொஸ்தே வெளிப்பாடுகளைப் பெந்தெகொஸ்தேயினரல்லாதோர் சரியானதென்று ஒத்துக்கொள்ளாதபோது அவருக்கெதிராய்ப் பயன்படுத்துகின்றனர். இவ்வளவு கடின வார்த்தைகளின் கருத்துதான் என்ன?

பழைய ஏற்பாட்டுச் சட்டத்தின்படி கடவுளைப் பழிக்கும் எவருக்கும் மரணத் தண்டனைதான் (லேவி 24:15,16). ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் "எல்லாப்" பாவங்களையும் நீக்கி நம்மைத் தூய்மையாக்கும் என்ற புதிய உடன்படிக்கையின் வாக்கைப்பற்றி என்ன? தமக்கு எதிரான பழிப்பைவிட ஆவியானவருக்கு எதிரான பழிப்பைக் கொடியது என இயேசு சொன்னதேன்?

பாவத்தைக் குறித்து நம்மைக் கண்டித்துணர்த்தி மனந்திரும்புதலுக்கு நடத்தக் கூடிய ஒரே சக்தி தூயாவியானவரே (யோ 16:7-11). ஒருவன் ஆவியானவரைப் பழித்துவிட்டால் அவனை மனந்திரும்பச்செய்ய யாருமில்லையே. மக்கள் இயேசுவைப் பைத்தியக்காரனென்றும், பிசாசு பிடித்தவனென்றும் தீர்த்தபோதுதான் அவர் ஆவியானவருக்கெதிரான பழிப்பைக் குறித்துப் பேசினார் (மாற் 3:21,22,28-30). பழிப்பதென்றால் கெட்ட வார்த்தைகளை அருவருப்பாய்ப் பேசுவதாம். கிறிஸ்துவை வேண்டுமென்றே பிடிவாதமாய்ப் புறக்கணிப்பதே "கிருபையின் ஆவியை நிந்திப்பது" ஆகும். ஆவியானவருக்கெதிரான பழிப்பைக் குறித்து எச்சரித்ததை அடுத்து இயேசு "கெட்டமரம், விரியன் பாம்புக்குட்டி" போன்ற உவமானங்களைக் கூறினார் (மத் 12:33-35,39). இதிலிருந்து அவர்களது பழிப்பு வெறும் வார்த்தைகளல்ல, அவர்களது உள்ளான குணத்தின் வெளிப்பாடு எனத் தெளிவாகிறது.

"ஆவியானவரின் செயல்பாட்டை ஒருவன் மறுப்பது அறியாமையினாலா, அகங்காரத்தினாலா என அறிந்தவர் கடவுள் ஒருவரே" என்று எச்சரித்துள்ளார் மதிப்புப்பெற்ற பெந்தெகொஸ்தே தலைவருள் ஒருவரான ஸ்டான்லி ஹார்ட்டன் (1916- ). பெந்தெகொஸ்தே அனுபவத்தைப் பிசாசின் செயல் என்று குற்றஞ்சாட்டி, ஆனால் பின்னர் தங்களது கண்கள் திறக்கப்பட்டு மனந்திரும்பி ஆவியின் அபிஷேகம் பெற்ற ஆயிரக்கணக்கானோர் உண்டு.

ஆவியானவரது வெளிப்பாடுகள் என அழைக்கப்படும் பல விநோத காரியங்கள் இன்று காணப்படுகின்றன. ஆனால் திருமறையில் அவைகளுக்குத் தெளிவான சான்று இல்லாத பட்சத்தில் அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள எவரும் கடமைப்பட்டவரல்ல. கவனமாயிருக்க வேண்டும்; அதே வேளையில் காலத்திற்கு முன் ஒன்றையும் முடிவாக நியாயந்தீர்த்துவிடவும் கூடாது.

*"குருடனாயிருந்தேன்; இப்பொழுது காண்கிறேன்!"*

DOCTRINES: NEXT ▸▸ MARCH 31